**World Christian Fellowship**
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# நோக்கம் - (1) குடும்பம்

நீங்கள் இங்கே இருப்பது தேவன் தன்னுடைய குடும்பத்திற்கு பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவதால்தான்!
ஆச்சரியமாயிருக்கிறதா!!

எபிரேயர் 2:10

> *ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.*

மேலும், நீங்கள் அவருடைய குடும்பத்தில் மகன்களாக மகள்களாக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அவருடைய வேலைக்காரர்களாக அவரை சேவிப்பதற்கல்ல. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தைப் பேணுவதற்கும் பராமரிப்பதற்கும் தேவனால் உருவாக்கப்பட்டார்களென நாம் எண்ணுவதுண்டு. ஆனால் அது முழுமையாய் பிழையான ஏமாற்று சிந்தை. உங்களுக்குத் தெரியுமா தேவனுக்கு ஒரு தோட்டக்காரன் தேவையாயிருந்தால் அவர் ஒருவரை உருவாக்கியிருப்பார். அவர் அதற்குப் பதிலாக ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கியது அங்கிருந்து அவர்கள் அவரோடு தொடர்புகொள்வதற்காக ஆகும். ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள், ஆதாமுக்குத் தோட்டத்தை பேணும்படி சொல்வதற்கு முன் தேவன் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்தார். ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கியது அவர்கள் மீது தன்னுடைய அளவில்லா அன்பை ஊற்றி அவர்களோடு நிரந்தர உறவைப் பேணும்படியாகவேயாகும்.

தெளிவுபடுத்துவதற்காக, வேதாகமத்திலிருந்து சில பகுதிகள்:

யோவான் 1:12

> *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

1 யோவான் 3:1

> *நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்: - நாம் (பிள்ளைகள்) அப்படி அழைக்கப்படுகிறவர்கள் மட்டுமல்ல அப்படிப்பட்டவர்களே*

ரோமர் 8:14 - 17

> *மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே தம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே: தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

நாம் அவருடைய பிள்ளைகளாயிருப்பதால் இதன்பிறகு நாம் பயப்படுகிறதற்கு அடிமைத் தனத்தின் ஆவியைப் பெறாமல் - பிள்ளைக்கும் அடிமைக்கும் இடையிலிருக்கும் வித்தியாசத்தைக் காண்பதற்கு இதனைப் புரிந்து கொள்வது அவசியமாகும். என்னுடைய மகன் என்னுடைய குடும்பத்தில் வேலைக்காரன் பெற்றிராத மிக விசேட சலுகையைப் பெறுகிறவனாயிருப்பான். கீழே இருக்கும் காட்சியைப் பார்ப்போம்.

நீங்கள் புதிய கார் ஒன்று வாங்கியிருக்கிறீர்களென்று நினைப்போம், உங்கள் மகனுக்கு அதை ஓட்ட விரும்புகிறான். ஒரு விபத்து நேர்ந்துவிட்டது. உங்கள் முதலாவது கேள்வி என்ன? ‘‘என்னுடைய மகன் எப்படியிருக்கிறான்?’’ என்பதுதான். இந்தக் காட்சியை மாற்றி நினைத்துப்பாருங்கள். வாகனத்தை வேலைக்காரன் ஓட்டினானென்று நினையுங்கள். இங்கே உங்கள் முதலாவது கேள்வி என்ன? ‘‘என்னுடைய கார் எப்படியிருக்கிறது.’’ வித்தியாசத்தை கவனித்தீர்களா?

இயேசு யோவான் 15:15 இல் இப்படியாகச் சொல்கிறார், *இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.*

தேவனுடைய குடும்பத்திற்கு நீங்கள் தத்தெடுக்கப்பட்டீர்கள்!

எபேசியர் 1:5

> *தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுக்கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரப்புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். இதனையே செய்வதற்கு அவருக்கு தேவைப்பட்டது. அது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியானதாகும்.*

எதைப் பெற்றுக்கொண்டோமென்று மேலே சொல்லப்படுகிறது.

- தேவனுடைய குடும்பத்திற்கு நீங்கள் புத்திரராகும்படி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் - சிலவேளைகளில் நீங்கள் உங்கள் உலகத் தந்தைக்கு விருப்பமில்லாதவர்களாயிருக்கலாம். ஆனால் தேவன் தன்னுடைய பரலோக குடும்பத்தில் உங்களை ஸ்வீகாரப் புத்திரர்களாக தெரிந்தெடுத்துள்ளார்.

- நீங்கள் ஒரு வேலைக்காரல்ல, தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய பிள்ளைகளாகும்படி அவரிடமிருந்து வல்லமை அதிகாரம் பெற்றிருக்கிறீர்கள்.

- உங்களுக்கு தேவனிடத்தில் உரிமையுண்டு. அதுமாத்திரமல்லாமல் கிறிஸ்துவினுடைய வாரிசுகளாகவும் இருப்பதோடு கிறிஸ்துவினுடைய பாடுகளில் மாத்திரமல்ல அவருடைய மகிமையிலும் பங்குகொள்கிறீர்கள்.

- இந்த வாக்குத்தத்தமானது நிகழ்கால உண்மையாகும். அது சிலவேளைகளில் எதிர்காலத்தில் நடைபெறும் ஒரு காரியமல்ல. நீங்கள் இப்பொழுதே வாக்குத்தத்தின்படி வாழலாம் !!!

கிறிஸ்தவம் ஒரு மதமல்ல என்பதை இதற்கு முன்னரும் நான் சொல்லியிருப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதைத் திரும்பவும் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். – அது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் அடைக்கலத்திலான தேவனுடனான ஒரு உறவாகும். இதற்கு பின்னர் நீங்கள் அந்நியரும், பரதேசிகளுமல்ல. எபேசியர் 2:19

> *ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,*




நீங்கள் பணக்காரராகவோ, ஏழையாகவோ இருக்கலாம். கறுப்பாயிருந்தாலும், வெள்ளையாயிருந்தாலும் மாநிறமாயிருந்தாலும் உயரமானாலும், குட்டையானாலும் பருமனானாலும், மெலிவானாலும் ஆசியனானாலும், ஐரோப்பியனானாலும் அமெரிக்கனானாலும், ஆபிரிக்கனானாலும் யாரானாலும், நீங்கள் எல்லோரும் தேவனுடைய குடும்பத்திற்கு சொந்தமானவர்கள் தான்*!*

நீங்கள் வேலைக்காரர்கள் அல்ல
நீங்கள் அடிமைகள் அல்ல
நீங்கள் அநாதைகள் அல்ல
நீங்கள் தேவனுடைய பிள்ளை!
தேவனுடைய குடும்பத்திற்கு உங்களை வரவேற்கிறோம்!!

மத்தேயு 6:9 இல், இயேசு கற்பிக்கிறார் - ‘‘நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது:

> *‘‘பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.’’*

இஸ்ரவேலர்கள் தேவனை எங்கள் தகப்பனே, என்று அழைத்ததில்லை. தேவனை அப்பா பிதாவே என்று முதன் முதலாக கூப்பிட அறிமுகப்படுத்தியது இயேசுதான். அவர் தேவனோடு தனக்குள்ள உறவில் எப்பொழுதும் தேவனை பிதாவே என்றழைத்தார். தேவனை ‘‘அப்பா பிதாவே’’ என்றழைப்பதில் தனியுரிமை இருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலங்களை திரும்பிப்பார்த்தால், தேவன் யூதர்களுக்கு அவருடைய பரிசுத்தத்தை சாதாரணமாய் அணுகமுடியாதபடி தேவாலயத்தில் திரையிடும்படி கற்பித்தார். அந்த திரைக்குப் பின்னால் அவர் குடியிருந்த மகா பரிசுத்த ஸ்தலம் இருந்தது. வருடத்திற்கு ஒரு தடவை பிரதான ஆசாரியனைத் தவிர வேறொருவரும் அதற்கு செல்ல முடியாதிருந்தது. அது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தெளிவான பிரிவாய் இருந்தது. பழைய ஏற்பாட்டு நாட்களில் இருந்த திரைச்சீலையை தேவன் ஒருநாள் கிழித்து மகா பரிசுத்த ஸ்தலத்தைத் திறந்து அப்பா பிதாவே என்று அழைக்க அனுமதித்தார். இப்போது புதிய ஏற்பாட்டில் தேவன் அவருடைய அறிவிலும், அன்பிலும் நாம் பங்குகொள்ளும்படி நமக்கு சுதந்திரம் அளித்திருக்கிறார். இயேசு சிலுவையில் அறையுண்டபோது தேவன் இந்தத் திரைச்சீலையை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழித்தார்.

(மத்தேயு 27:51 – *அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது.)* எனவே தேவனை எந்தவேளையிலும் அப்பா பிதாவே என்றழைக்க சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டிலிருந்த விதத்தை

அறிவோமானால், இப்போது பிள்ளைகளாக நமக்கு தனியுரிமை தந்திருப்பதைக் குறித்து நாம் நிரந்தரமாக தேவனுக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டவர்களாய் இருப்போம்!

இயேசு பூமியில் இருந்தபோது, அநேக காரியங்களை தெளிவுபடுத்துவதற்கு உவமானக் கதைகளை சொல்லியிருந்தார். லூக்கா 15 அதிகாரத்தில் எவ்வளவு நல்ல தகப்பனை நாம் கொண்டிருக்கிறோமென்று ஊதாரி மகனைக் குறித்து மிகத் தெளிவான உதாரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஊதாரி மகனுக்குத் தன் தகப்பன் இறந்ததன் பின்பதாக கிடைக்கவேண்டிய சொத்துக்கள் தேவைப்பட்டது. ஆனால் அவன் தன்னுடையதெல்லாம் இழந்து தகப்பன் வீட்டிற்கு திரும்பிவரும்போது, அவனுடைய தகப்பன் அவன் மீள கிடைத்ததையிட்டு மிகவும் சந்தோஷப்பட்டார். தூரத்தில் அவனைக் கண்டவுடனே ஓடிச்சென்று கட்டித்தழுவி அவனை மீண்டுமாக வீட்டிற்கு வரவேற்கிறார். அவனைக் கட்டித்தழுவி முத்தமிடுகிறார். இந்தக் காட்சியைத் தேவன் உங்கள் தகப்பனாக நீங்கள் பாவியாக இருக்கும்போதே ஓடிவந்து உங்களைக் கட்டித்தழுவி வரவேற்பதை காணமுடிகிறதா –வேதாகமத்தில் மனந்திரும்பிய பாவியை நோக்கித் தேவன் ஓடிச்சென்று வரவேற்ற ஒரே ஒரு காட்சி இதுவாகும்.

இப்போது இயேசு நாம் தேவனுடைய புத்திரர்களென்று பேசிய முதல் சந்தர்ப்பத்தை பார்ப்போம். இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழும்போது அவர் மக்தலேன் மரியாளுக்கு கல்லறையின் வெளியே காட்சியளித்து அவளுக்கு சொன்னதாவது, யோவான் 20:17

> … “*இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் <u>என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும்</u> ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.*

இது ஒரு நல்ல செய்தி! தேவன் இயேசுவின் தந்தை மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனுமாவார் !

தகப்பன்-மகன் உறவானது இயேசுக்கிறிஸ்துவை தவிர்த்து இருப்பதில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்காக நன்றி.

இப்பொழுது நாம் தேவனோடும், எமக்குள்ளிருக்கும் அவருடைய குமாரனுடைய ஆவியோடும், அப்பா பிதாவே என்று அழைக்கத்தக்க உறவைக் கொண்டிருக்கிறோம். மனித ஞானத்தால் புரிந்துகொள்ள அரிதான உறவை அர்த்தப்படுத்துகிறது. நாம் அவரோடு நடக்கின்றோம், பேசுகின்றோம், அவரோடு கூட சிரிக்கின்றோம். அவருடைய மடியில் அமர்கின்றோம், எம்முடைய கவலைகளை பகிர்ந்துகொள்கின்றோம், எல்லாவற்றையும் விட அவரோடு கூட ஆச்சரியமான உறவை கொண்டிருக்கிறோம். எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ளாமல் இன்னும் பழைய ஏற்பாட்டு வழிகளைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். தேவனை விட்டுத் தூரமாகிறவனுக்கு செவிகொடாததற்காக தண்டனை வழங்கி நாம் விழுந்த இடத்திலிருந்து தூக்கிவிடுகிறார். அவர்களுக்கு தேவன் கண்டிப்பானவர், கோபமுள்ளவர். அநேக பிரசங்கியாளர்கள் தேவனுடைய மிகுந்த கோபம் குறித்து பிரசங்கித்திருக்கிறார்கள். என்னுடைய இதயத்தின் அழுகையானது நீங்கள் தனிப்பட்ட ரீதியில் மிக நெருக்கமாக தேவனை உங்கள் தகப்பனாக காணவேண்டும் என்பதேயாகும்.

போதகர்களும், பிரசங்கிகளும் மாத்திரமே தேவனுடைய சத்தத்தைக் கேட்க முடியுமென்று ஒரு எண்ணமிருக்கிறது. அது ஒரு பிரமாண்டமான பொய்யாகும். என்னுடைய கருத்து என்னவெனில், தேவன் அதிக இரக்கமுள்ள ஒரு தந்தையாக இருப்பதுடன், அவர் தன்னுடைய 5 வயது பிள்ளைக்கு 20 வயது பிள்ளையை விட அதிக பொறுமையுடன் செவிகொடுக்கிறார். மற்றவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் தங்களுடைய உணர்வை வெளிப்படுத்தத் தெரியாதவர்கள் மீது தேவன் அதிக கவனத்தை செலுத்துகிறார். இதன் சாராம்சமானது உங்கள் தெரிவிக்கும் தன்மை எவ்வளவு பலவீனமாயிருந்தாலும், தேவன் அதைப் புரிந்து கொள்வார். ஏனென்றால் அவர் உங்கள் தகப்பனாக இருக்கிறார் !

எபிரேயர் 8:11

> அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள். ஆகையால், கர்த்தரை அறிந்துகொள்ளென்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.

கழுதையின் வயதுக்கு ஒத்த வருடங்களாக நீங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், அல்லது நேற்றைய தினம் தான்

தேவனை நீங்கள் அறிந்திருந்தாலும், அது ஒரு பிரச்சினையல்ல – இப்பொழுது நீங்கள் தேவனை “அப்பா” என்று தைரியமாய் அழைக்கலாம்.

எப்படியாக இந்தக் குடும்பம் உருவாக்கப்படுகிறது?

யோவான் 1:13

> *அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், <u>தேவனாலே</u> பிறந்தவர்கள்.*

நீங்கள் எப்படிப் பிறந்திருந்தாலும், எங்கே பிறந்திருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் தேவனாகிய இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர் நீங்கள் தேவனாலே பிறந்தவர்கள். எங்களுடைய பெற்றோரைத் தெரிந்தெடுப்பதற்கான அதிகாரம் நம்மில் ஒருவருக்கும் கொடுக்கப்படவில்லை. ஆனால் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தவராவதற்கு எம்மால் தெரிவு செய்யமுடியும்.

கலாத்தியர் 3:26

> *நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்.*

இந்தக் குடும்பம் இப்பொழுது எங்கேயிருக்கிறது?

1 தீமோத்தேயு 3:14-15

> *நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், <u>தேவனுடைய வீட்டிலே</u> நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். ஆந்த வீடு <u>ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச்</u> சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.*

இன்று, நம்முடைய சபைகள் - தேவனுடைய பரிசுத்த இல்லம. தேவன் எமது தகப்பனாகவும், இயேசு எமது மூத்த சகோதரனாகவும், நாம் கிறிஸ்துவுக்குள் ஒருவருக்கொருவர் சகோதரர்களும், சகோதரிகளுமாக, ஒரே குடும்பத்தாரைப்போன்று

ஒருவர் ஒருவருடைய பாரங்களை சுமந்தவர்களாக, ஒருவர் மீது ஒருவர் அன்பானவர்களாகவும்,
கரிசனையுள்ளவர்களாகவுமிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கு சொந்தமாவதற்காக தேவன் உங்களை அழைத்திருக்கிறார்!

ரோமர் 1:6

> *அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும்,*

வேதாகமத்தில் சபையானது அப்பமாகவும், சரீரமாகவும், திராட்சைத் தோட்டமாகவும், ஆட்டு மந்தைக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. நாம் அவருடைய புத்திரர்களாக அவருடைய மகனைப் போன்றவர்களாக வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்!

ரோமர் 8:28-29

> *அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.*

2 கொரிந்தியர் 3:18

> *நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். All of us*

நீங்கள் தேவனுடைய மகனாக அல்லது அவருடைய பிள்ளையாக இருப்பின், உங்களுக்கு ஒரு தகப்பன் உண்டு. எப்படிப்பட்ட தகப்பன் நமக்குண்டு?

இயேசுவை நீங்கள் உங்கள் தேவனாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டதன் பின்னர், நீங்கள் தேவனுக்கு அந்நியர்களல்ல. நாங்கள் ஏற்கனவே பாடங்களில் கற்றது போல நீங்கள் சிலவேளைகளில் தனிமையை உணர்ந்தபோதிலும், நீங்கள் ஒரு அநாதையல்ல. பரலோகத் தகப்பன் உங்களை நேசித்து, தன்னுடைய பிள்ளையாக உங்களைப் பார்க்கிறார். – அவருடைய வெகுமதியான உரிமை.

2 கொரிந்தியர் 6:17-18

> *‘‘அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.’’*

1 யோவான் 3:1

> *நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே <u>பிதாவானவர் நமக்குப் பாராட்டின</u> அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்:*

உங்களுக்கு எத்தனை வயதாயிருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள் என்பது ஆறுதலளிக்கிற காரியமாகும். நீங்கள் அன்பான பாதுகாக்கும் தேவனாம் தகப்பனுக்கு சொந்தமானவர்கள். சர்வ வியாபியான தேவன், உங்களை எப்போதும் கவனிக்கிறவரும், நீங்கள் அவரோடு எப்போதெல்லாம் பேச விரும்புகிறீர்களோ, அப்போதெல்லாம் கேட்க ஆயத்தமாயுமிருக்கிறவர். ஆனால் இந்தச் சிறப்புரிமை இத்தோடு நின்றுவிடவில்லை. நீங்கள் ஸ்வீகாரம் செய்யப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும், இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட அதே அதிகாரம் உங்களுக்கும் உண்டு:

ரோமர் 8:17

> *நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே: தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே: கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

நீங்கள் தேவனுடைய பிள்ளையாவதற்கு விருப்பப்படின், கிறிஸ்துவிடம் உங்களுக்கிருக்கும் விசுவாசம் அதற்கு நேராய்

உங்களை வழிநடத்தும். கலாத்தியர் 3:26-27 ‘‘*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*’’

இந்தவசனமும் எம்முடைய விசுவாசம் எப்படி தேவனுடைய பிள்ளையாவதற்கு வழிநடத்துகிறது என்பதைச் சொல்கிறது. நம்மில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களென்றே அது சொல்கிறது. ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ என்று சொல்லப்படும் வார்த்தையானது நோக்கத்தையுடையதான அல்லது இருப்பதற்கான ஒழுங்குமுறை என்றே அர்த்தப்படுத்துகிறது. ஆகவே, நாம் ஞானஸ்நானம் பெற்றதன் நோக்கம் தேவனுடைய பிள்ளையாவதற்கேயாகும்.

1 பேதுரு 5:10

> *கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.*

1 யோவான் 3:2

> *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்!*

இறுதியாக, உங்கள் தகப்பனாகிய தேவனிடமிருந்து உங்களுக்கான கடிதம் இங்கே காணப்படுகிறது!!

என் பிள்ளையே,

நீ என்னை அறியாவிட்டாலும் நான் உன்னைக் குறித்து அனைத்தும் அறிந்திருக்கிறேன். (சங்கீதம் 139:1)

உன் உட்காருதலையும் எழுந்திருக்குதலையும் நான் அறிந்திருக்கிறேன். (சங்கீதம் 139:2)

உன் வழிகளெல்லாம் எனக்குத் தெரியும். (சங்கீதம் 139:3)

உன் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத்தேயு 10:30)

நீ என் சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவன் (ஆதியாகமம் 1:27)
எனக்குள் நீ பிழைக்கிறாய், அசைகிறாய், இருக்கிறாய். (அப்போஸ்தலர் 17:28)

நீ என்னுடைய சந்ததியாய் இருக்கிறாய். (அப்போஸ்தலர் 17:28)

உன் தாயின் கருவிலே நீ உண்டாவதற்கு முன்னே உன்னை அறிந்திருக்கிறேன்.
(எரேமியா 1:4-5)

உலகத்தோற்றத்திற்கு முன்னே உன்னை நான் தெரிந்துகொண்டேன். (எபேசியர் 1:11-12)

நீ ஒரு தவறுதலால் உண்டாக்கப்பட்டவனல்ல,
உன்னுடைய நாட்கள் எல்லாம் என்னுடைய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.
(சங்கீதம் 139:15-16)

உன்னுடைய பிறப்பின் சரியான நேரத்தையும்,
நீ குடியிருக்கும் எல்லையையும் நான் அறிந்திருக்கிறேன்.
(அப்போஸ்தலர் 17:26)

நீ பிரமிக்கத்தக்கதாக அதிசயமாய் உண்டாக்கப்பட்டாய் (சங்கீதம் 139:14)

உன் தாயின் கர்ப்பத்தில் நான் உன்னை காப்பாற்றினேன் (சங்கீதம் 139:13)

கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் நான் உன்னை காப்பாற்றினேன். (சங்கீதம் 71:6)

என்னை அறியாதவர்களால் நான் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (யோவான் 8:41-44)

நான் கோபிக்கிறதற்கு தாமதமாய் இருக்கிறேன். நான் அன்பாகவே இருக்கிறேன்.
(1யோவான் 4:16)

உன்மீது என் அன்பை காண்பிக்க நானே விருப்பம்கொண்டேன். (1 யோவான் 3:1)

நீங்கள் என்னுடைய பிள்ளைகளாயும் நான் உங்கள் பிதாவாய் இருக்கிறேன்.(1யோவான் 3:1)

உங்கள் உலக பிதாக்கள் கொடுக்கமுடியாத காரியங்களையும் நான் உங்களுக்கு தருகிறேன்.
(மத்தேயு 7:11)

நான் உங்கள் பூரண சற்குணரான தகப்பன் (மத்தேயு 5:48)
நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் என்னிடத்திலிருந்து வருகிறது (யாக்கோபு 1:17)

நான் கொடுப்பவராய் இருப்பதால் உங்கள் தேவைகளை சந்திக்கிறேன். (மத்தேயு 6:31-33)

உங்களைக் குறித்ததான என்னுடைய எதிர்கால நினைவுகள் எப்பொழுதும் சமாதானத்துக்கு ஏதுவானவையே.(எரேமியா 29:11)

அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன். (எரேமியா 31:3)

உங்களைக் குறித்த என்னுடைய ஆலோசனைகள் மணலைப் பார்க்கிலும் அதிகமாம். (சங்கீதம் 139:17-18)

நான் உன்மீது கெம்பீரமாய் களிகூர்ந்து பாடுகிறேன். (செப்பனியா 3:17)

நான் உனக்கு நன்மை செய்வதை நிறுத்துவதில்லை (எரேமியா 32:40)
நீங்கள் என்னுடைய சொந்த சம்பத்து. (யாத்திரயாகமம் 19:5)

என் முழு இருதயத்தோடும், என் முழு ஆத்துமாவோடும் உங்களை நான் நாட்டுவேன். (எரேமியா 32:41)

நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமியா 33:3)

உன் முழு இருதயத்தோடு என்னைத் தேடுவாயானால், என்னைக் கண்டடைவாய்.(உபாகமம் 4:29)

என்னிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு.
நான் உன் இருதயத்தின் வேண்டுதல்களை நிறைவேற்றுவேன். (சங்கீதம் 37:4)

நானே உங்களுடைய அந்த விருப்பங்களைத் தருகிறவர். (பிலிப்பியர் 2:13)

நீ நினைக்கிறதற்கும் மேலாய் நான் கிரியை செய்கிறவர். (எபேசியர் 3:20)

நான் உன்னுடைய நல்ல தேற்றரவாளன். (2 தெசலோனிக்கேயர் 2:26-17)
உன்னுடைய எல்லா பிரச்சினைகளிலும் உன்னைத் தேற்றுகிற தகப்பன் நானே.(2 கொரிந்தியர் 1:3-4)

நீ நொறுங்குண்ட இருதயமுள்ளவனாயிருந்தால் நான் உனக்கு சமீபமாயிருக்கிறேன்.
(சங்கீதம் 34:18)

மேய்ப்பனைப் போல நான் உன்னைச் சுமந்து, என் இருதயத்திற்கு சமீபமாய் உன்னைச் சுமப்பேன். (எசாயா 40:11)

ஓர் நாள் உன்னுடைய கண்களின் கண்ணீர்கள் யாவையும் நான் துடைப்பேன். (வெளிப்படுத்தல் 21:3-4)

இந்த உலகில் நீ அநுபவிக்கும் எல்லா வேதனைகளையும் நான் எடுத்துப்போடுவேன். (வெளிப்படுத்தல் 21:3-4)

என்னுடைய குமாரன் இயேசுவைப் போலவே உன்னையும் நான் நேசிக்கிறேன்.
நான் உன்னுடைய தகப்பன்.
(யோவான் 17:23)

இயேசுவுக்குள், என்னுடைய அன்பு உனக்கு வெளிப்பட்டது
(யோவான் 17:26)

அவர் என்னுடைய மகிமையின் பிரகாசமாய் இருக்கிறார். (எபிரேயர் 1:3)

நான் உன் சார்பில் இருக்கிறேன்.
உனக்கு விரோதமாய் அல்ல என்பதைத் தெரியப்படுத்தவே அவர் வந்தார்.(ரோமர் 8:31)

நான் உன்னுடைய பாவங்களை எண்ணவில்லை. (2 கொரிந்தியர் 5:18-19)

நானும் நீயும் ஒப்புரவாகும்படி இயேசு மரித்தார். (2 கொரிந்தியர் 5:18-19)

என்னுடைய முழுமையான அன்பை தெரிவிக்கும்படியாக
அவருடைய மரணம் அமைந்தது.(1 யோவான் 4:10)

நான் நேசிக்கிற அனைத்தையும் நான் விட்டுவிட்டேன்.
உன்னுடைய அன்பை பெற்றுக்கொள்வதற்காக.
(ரோமர் 8:31-32)

என்னுடைய மகனாகிய இயேசுவின் ஈவுகளை நீ பெற்றுக்கொள்வாயானால்
என்னையே பெற்றுக்கொள்கிறாய்.
(1 யோவான் 2:23)

திரும்பவும் என்னுடைய அன்பிலிருந்து உன்னை எதுவும் பிரிக்காது.
(ரோமர் 8:38-39)

வீட்டிற்கு வா. நான் உனக்காக பரலோகில் பெரிய சந்தோஷத்தை வைத்திருக்கிறேன். (லூக்கா 15:7)

நான் எப்பொழுதும் தந்தையாகவே இருப்பேன். இனிமேலும் தந்தையாக இருப்பேன்.
(எபேசியர் 3:14-15)
ஏ
ன்னுடைய கேள்வியானது, ‘‘நீ என்னுடைய பிள்ளையாவாயா?’’
(யோவான் 1:12-13)

நான் உனக்காக காத்திருக்கிறேன். (லூக்கா 15:11-32)

அன்பான,
உன் தந்தை,
எல்லாம்வல்ல தேவன்.

தேவன் உன்னுடைய தந்தை!
நீ அவருடைய அன்புக்குரிய பிள்ளை(கள்)!!

அழகான இந்த தேவ குடும்பத்திற்கு உங்களை வரவேற்கின்றோம்!!